# கேந்தி + கம்பு… வறட்சியிலும் வருமானம் தரும் வளமான கூட்டணி

25.08.2013



கடந்த சில ஆண்டுகளாக வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டுள்ளதால் ஆண்டுக்கணக்கில் வற்றாத கிணறுகள் கூட, வற்றிப்போய் கிடக்கின்றன. இந்நிலையில் குறைவான தண்ணீரில் விளையும் பயிர்களைத் தேட ஆரம்பித்திருக்கிறார்கள் விவசாயிகள் பலரும். அவர்களில் ஒருவராக, குறைவான தண்ணீரைப் பயன்படுத்தி கேந்தி (செண்டுமல்லி), கம்பு ஆகியவற்றை ஒன்றாக சாகுபடி செய்திருக்கிறார், திருவண்ணாமலை மாவட்டம், தானிப்பாடி, சி.கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ். கண்ணுக்கெட்டிய தூரம் வரை காய்ந்து கிடக்கும் நிலங்களுக்கிடையில், செழுமை கட்டி நிற்கிறது, செண்டுமல்லித் தோட்டம்.

விவசாயம்தான் இவரது குடும்பத் தொழில். சின்ன வயதில் இருக்கும்பொழுது இவரது அப்பாவுடன் தோட்டத்திற்கு போவேன் என்கிறார் சுரேஷ். தம்பி பூமிநாதனுடன் சேர்ந்து விவசாயம் செய்கிறார். புதுமையாக ஏதாவது செய்ய வேண்டும் என்று முலாம்பழம், தர்பூசணி எல்லாம் சாகுபடி செய்துள்ளார். இவரிடம் நான்கு ஏக்கர் நிலமிருக்கிறது. மொத்த நிலத்திலும் வாழை, மணிலா, நெல், காய்கறி சாகுபடி செய்கிறார். இப்பொழுது தண்ணீர் இல்லாததால், 20 சென்ட் நிலத்திலும் கோலியாஸ், 10 சென்டில் மாட்டுத் தீவனம், 70 சென்ட் நிலத்தில் கேந்தி (செண்டு மல்லி), அதற்கு ஊடுபயிராக கம்பு என்று சாகுபடி செய்திருக்கிறார். மீதி மூன்று ஏக்கர் நிலம் இருப்பதால் கொஞ்சமாக கேந்தி போட நாற்று நட்டார். வெயில் தாங்காமல் நாற்றுகள் வாட அதைக் காப்பாற்ற யோசித்த போது பாலேக்கர் ஊடுபயிர் முறைப்படி கம்பை விதைத்திருக்கிறார். கம்போட நிழலில் நன்றாக வளர்ந்தது. இரண்டிற்கும் அதிக தண்ணீர் தேவைப்படவில்லை என்ற சுரேஷ், 70 சென்ட் நிலத்தில் கேந்தி, கம்பு சாகுபடி பற்றி விவரித்தார். 2500 கேந்தி நாற்று… 500 கிராம் கம்பு விதை கேந்தி மற்றும் கம்பு இரண்டும் அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றவை. இரண்டின் வயதும் 100 நாட்கள், வடிகால் வசதியுள்ள அனைத்து வகை நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். 70 சென்ட் நிலத்தில், டிப்பர் லாரியில் இரண்டு லோடு எருவைக் கொட்டி கலைத்து, மண் ‘பொலபொலவென’ மாறும் அளவுக்கு உழவு செய்ய வேண்டும். வரிசைக்கு வரிசை ஐந்து அடி இடைவெளி, செடிக்குச் செடி இரண்டு அடி

இடைவெளியில் சொட்டுவது போல சொட்டுநீர்க் குழாய்களை அமைக்க வேண்டும். அரைமணி நேரம் பாசனம் செய்தால் ஒவ்வொரு துளைக்கு அருகிலும், அரை அடி விட்டத்தில் வட்ட வடிவில் நிலம், ஈரமாகி இருக்கும். நீர் சொட்டும் இடத்திற்கு நேராக விரலால் பள்ளம் எடுத்து, 20 நாட்கள் வயதுள்ள கேந்தி நாற்றுகளை நடவு செய்து(2500 நாற்றுகள் தேவைப்படும்), இரண்டு மணி நேரம் பாசனம் செய்ய வேண்டும். நடவு செய்த 8-ம் நாளில் கேந்தி செடிகளுக்கு எதிர் திசையில் ஒரு அடிக்கு ஒரு கம்பு விதை வீதம் நடவு செய்ய வேண்டும். (அரை கிலோ கம்பு விதைகள் தேவைப்படும்).

**ஊட்டத்துக்கு ஜீவாமிர்தம், குணபம்**

கம்பு, நடவு செய்த 4-ம் நாளில் முளைத்து விடும். கேந்தி நடவு செய்த 20-ம் நாளில் களை எடுத்து, ஆமணக்குப் பிண்ணாக்கு 50 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு 50 கிலோ, தேங்காய் பிண்ணாக்கு 20 கிலோ, மண்புழு உரம் 50 கிலோ ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து, ஒவ்வொரு கேந்தி செடிக்கும் கையளவு வைத்த மண் அணைக்க வேண்டும். களைகளைக் கொத்திவிட வேண்டும். மண்ணின் ஈரத்தைப் பொருத்து, 5 முதல் 7 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்தால் போதுமானது. 10 நாட்களுக்கு ஒரு முறை 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலை பாசன நீரில் கலந்துவிட வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை 9 லிட்டர் நீரில், 50 மில்லி வராக குணபம், ஒரு லிட்டர் பழக்கரைசல், 50 மில்லி, நோய் தாக்குதல் இருந்தால் பூச்சிவிரட்டி தெளித்துக் கட்டுப்படுத்தலாம். நடவு செய்த 45-ம் நாளில் கேந்தியில் பூவெடுக்க ஆரம்பித்து, 60-ம் நாளில் அறுவடைக்கு வரும். நான்கு நாட்களுக்கு ஓர் அறுவடை என 10 அறுவடை.

**70 சென்ட்… ரூ.16 ஆயிரம்**

சாகுபடிப் பாடம் முடித்த சுரேஷ் அறுவடைக்கு 50 கிலோ பூ கிடைக்கும். 10 அறுவடைக்கும் சேர்த்து 500 கிலோ, ஒரு கிலோ கேந்தி 15 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரைக்கும் விற்பனையாகிறது. சராசரியாக 20 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் 500 கிலோ பூவில் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். கேந்தி அறுவடை முடியும் சமயத்தில் கம்பு அறுவடைக்குத் தயாராகிவிடும். அறுவடை செய்து மெஷின் அடித்து சுத்தப்படுத்தும்பொழுது மூன்று மூட்டை (100 கிலோ மூட்டை) அளவுக்கு கம்பு கிடைக்கும். ஒரு மூட்டை 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. கேந்தி, கம்பு இரண்டில் இருந்து மொத்தம் 16 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். செலவு போக 10 ஆயிரம் ரூபாய் இலபாம் என்றார். இந்தப் பணம் குறைவாக தெரிந்தாலும் கடுமையான வறட்சியில் ஒன்றுமே செய்ய முடியாமல் இருப்பதற்கு குறைந்த தண்ணீரில் காசு கிடைப்பது பெரிய விஷயம் என்கிறார் சுரேஷ்.

**தொடர்புக்கு**

**சுரேஷ், செல்போன் : 98434-45814**

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.08.13** www.vikatan.com